1978 செப்டம்பர் 1]

திரு. செ. சிவசாமி : தொண்டி, நம்புதாளை, திருப்பாலைக்குடி போன்ற இடங்களில் நாட்டுப் படகுக்காரர்களை விசைப்படகுக் காரர்கள் தொந்தரவு செய்து பல கேஸ்கள் நடந்து கொண் டிருக்கின்றன. அவைகள் எல்லாம் வாபஸ் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. மு. அரங்கநாதன் : கடந்த பேரவைக் கூட்டத்தில் கூட்டுறவு முறையில் தவணை முறையில் வழங்கப்படுகிற விசைப் படகுகள் தவணைமுறை தீருவதற்கு முன்னால் விற்பனை செய்யப் பட்டால் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று இதே கேள்வியைக் கேட்டபோது, அப்படி நடவடிக்கை எடுக்க உரிமை இல்லை என்று இதே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அது குறிப்பிலேயும் வந்திருக்கிறது. எனக்கும் வந்திருக்கிறது. அதை வேண்டுமானால் நான் காண்பிப்பதற்குத் தயாராயிருக் கிறேன். ஆனால், இப்போது தவணைமுறை தீருவதற்கு முன்னால் விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இதில் நான் எதை ஏற்றுக்கொள்வது, எதை விடுவது என்பதில் ஐயம் எழுகிறது. நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் விவரங்கள் தர நான் தயார், அப்படித் தந்தால் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: முரண்பாடு என்ற முறையில், இந்த அவையில் எந்த நேரத்திலும் எந்தப் பதிலையும் நான் சொன்னதில்லை.

தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் மீன் விற்பனை.

*வினா 22—**திரு. ந. தனசேகரன் :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் மீன்களை வாங்கி தலை சுமை மூலம் விற்கும் ஏழை மீனவர்களிட மிருந்து வரி வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதனை நீக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1978 செப்டம்பர் 1

திரு. ந. தனசேகரன் : அங்கு வரக்கூடிய மீனவர்களிடம் அப்படிக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகிறது என்ற புகார் வருகிறது. அப்படி வசூலிக்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படிக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் மீன்களை வாங்கி தலைச்சுமையாக எடுத்துச் செல்கிற ஏழை மீனவர்களிடம் வரி வசூலிக்கப்படுகிறதா என்பது மூலக் கேள்வி. வாங்கி விற்கிற மீனவர்களிடமிருந்து எந்தவிதமான வரியும் வசூலிக்கப்படவில்லையென்று மூலக்கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் மீன்களைக் கரையேற்ற சில கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இறால் மீனாக இருந்தால் ஒரு கிலோவிற்கு பத்து பைசா என்றும், இறால் தவிர பிற மீன்களுக்கு ஒரு கிலோவிற்கு 2½ பைசா வீதம் கரையேற்றப்படுகிற மீன்களுக்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதே போல் படகுகளில் தங்குவதற்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஐம்பது அடி வரையில் உள்ள படகுகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று அல்லது மாதத்திற்கு ரூ. 20, ஐம்பது அடிகளுக்கு மேற்பட்ட படகுகளுக்கு நாள் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் அல்லது மாதம் ரூ. 135 என்ற விகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதன் மூலம் வருகிற வருமானத்தைக் கொண்டு இந்த மீன்பிடித் துறைமுகத்தைப் பராமரிப்பதற்கான செலவுகள் செய்ய இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதே தவிர, மீனவர்களிடம் வாங்கி விற்பனை செய்யக் கொண்டுபோகிற வியாபாரிகளிடமிருந்து எந்த விதமான கட்டணமும் வசூலிக்கப்படவில்லை. அப்படி வசூலிக்கப்படுமானால், உறுப்பினர் அவர்கள் தக்க ஆதாரங்களோடு அதை என் கவனத்திற்குக் கொண்டுவந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ராமநாதன்: கடலோரப் பகுதிகளில் பிடிக்கப்படும் இந்த மீன்களை கிராமப்புறங்களில் விற்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

1978 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: கடலோரப் பகுதிகளில் கிடைக்கிற பெருமளவு மீன்களை மீன்கள் அதிகமாகக் கிடைக்காத உள்நாட்டுப் பகுதிகளில் விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் மீன் விற்பனைக் கூடங்கள் ஏற்படுத்துகிற திட்டம் அரசினுடைய பரிசிலனையில் இருக்கிறது. கூடிய விரைவில் அது செயல்படுத்தப்படும்.

திரு. ந. தனசேகரன்: ஏழை மீனவர்களிடமிருந்து வசூலிக்கிற இந்தப் பணம் துறைமுகப் பராமரிப்புச் செலவிற்காகச் செலவு செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். இச் சிறிய தொகை மூலம் பராமரிப்பதை விடுத்து, அப்படிக் கட்டணம் வசூலிப்பதை அடியோடு நிறுத்த முயற்சி எடுத்து, அந்த ஏழை மீனவர்கள் காப்பாற்றப்படுவார்களா?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கட்டணத்தின் மூலமாக வருகின்ற மொத்தத் தொகையிலிருந்து மீன்பிடி துறைமுகத்திற்கு ஆகின்ற மொத்த செலவில் ஓரளவு சரிகட்டுவதற்குப் பயன்படுத்தப் படுகிறதே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல் அதிகமான தொகை இந்த மீன் பிடிப்பவர்களிடமிருந்து வசூலிக்கப்படவில்லை. இறால் மீன் வருவதில் ஒரு கிலோவுக்கு 10 பைசா வசூலிக்கப்படுகிறது, ஒரு கிலோ இறால் மீனின் விலை 50 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை இருக்கிறது. ஆகவே, இந்தப் பத்து பைசா என்பது பெரிய தொகை அல்ல. அதேபோல் ஒரு விசைப் படகுக்கு—சிறிய படகுகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் அல்லது மாதத்திற்கு 20 ரூபாய், பெரிய படகாக இருந்தால் ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் அல்லது மாதம் ஒன்றுக்கு 135 ரூபாய் என்ற அளவில் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. இது அவ்வளவு பெரிய தொகை அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.